
நிறுத்தக்குறிகள்

MS.A.F.Zainab MLC

www.lkedu.lk



முற்றுப்புள்ளி



காற்புள்ளி



வினாக்குறி

www.lkedu.lk

ஒரு வாக்கியத்தின் கருத்து முற்றுப் பெறும் இடத்தில் முற்றுப்புள்ளி இடப்பட வேண்டும்.

} முற்றுப்புள்ளி பயன்படுத்தப்படும் இடங்கள்:

- வாக்கியம் நிறைவு பெறும் இடங்கள்

உ+ம்

1.நான் புத்தகம் வாசித்தேன்.
2. நேற்று மழை பெய்தது.
3. பூக்கள் நறுமணம் வீசின.

www.lkedu.lk

- சொற்கள் சுருக்கி எழுதப்படும் இடங்கள்

உ+ம்

1. கிறிஸ்துவுக்கு முன்(கி.மு)
2. முற்பகல்(மு.ப)
3. பிற்பகல்(பி.ப)
4. இலங்கை போக்குவரத்துச்சபை(இ.போ.ச)
5. இலங்கை மின்சார சபை(இ.மி.ச)

- முகவரி எழுதப்படும் இடங்கள்

புனித அந்தோனியர் வீதி,
மட்டக்களப்பு.

www.ikedu.lk



காற்புள்ளி

- வாக்கியம் ஒன்றில் வரும் வேறுபட்ட செயல்களை பிரித்துக்காட்டும் போது

1. மின்னல் மின்னி, இடி இடிக்க, வானம் கறுக்க, குளிர்காற்று வீச சோவென மழை பெய்யத் தொடங்கியது.

- கடிதங்கள், துண்டுப் பிரசுரங்களில் பிறரை விளிக்கும் இடங்கள்

உ+ம்

1. அன்புள்ள நண்பா,
2. அன்புமிகு பொதுமக்களே,
3. ஐயா,
4. அன்புடையீர்,

www.lkedu.lk

- பல பெயர்களை வேறுபடுத்திக் காட்டும் இடங்கள்

உ+ம்

1.மா, பலா, வாழை என்பன முக்கனிகளாகும்.

2. பாம்பு, ஆமை, முதலை போன்றன ஊர்வனவாகும்.

- முகவரி எழுதும் இடங்கள்.

நா.கமலன்,
357, புதிய தெரு,
மட்டக்களப்பு.

www.lkedu.lk



வினாக்குறி

- வினாக்கள் தொடுக்கப்படும் வாக்கியத்தின் முடிவில் வினாக்குறி இடப்படும்.

1.உமது எதிர்கால இலட்சியம் என்ன?

2. எமது நாட்டின் ஜனாதிபதியின் பெயர் என்ன?

www.lkedu.lk

செயலட்டை (தமிழ்)

தரம்:3

பின்வரும் நிறுத்தக்குறிகளுள் பொருத்தமான நிறுத்தக்குறிகளை வாக்கியங்களில் இட்டு எழுதுங்கள்

முற்றுப்புள்ளி(.) காற்புள்ளி (,) வினாக்குறி (?)

1.அப்பா என்னை அழைத்துச் சென்றார்

2.மரப் பொந்துகளில் கிளிகள் வாழ்கின்றன

3.இவை பழங்கள் விதைகள் பூக்களின் மொட்டுகள் போன்றவற்றை உண்கின்றன

4.கிளியின் அலகு பலம் வாய்ந்தது

5.இது ஒரு வேலையா

6.நீலத் தொட்டி எதற்கு

7.மரங்கொத்தி பூச்சிகள் பழங்கள் விதைகள் என்பவற்றை உண்ணுகின்றது

8.காகிதத்தைக் கண்டால் கண்ணீர் விடும் அது என்ன

9.உங்களால் எழுதவும் வாசிக்கவும் முடியுமா

10.செம்மஞ்சள் தொட்டி எதற்கு

www.ikedu.lk